# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

(சபை வரைவுள்ளது)

(சங்கங்களுக்கான அரச கட்டளைச் சட்டத்தின் படி பதிவுபெற்ற
தமிழ் மொழிப் பண்பாட்டு அமைப்பு)

## ஐம்பத்தேழாவது (57)
## ஆண்டுப் பொது அறிக்கை

# 1998 - 1999

தொடக்கம் - 22.03.1942 பதிவு எண் - எஸ்.73

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## 57வது ஆண்டுப் பொது அறிக்கை

அன்புள்ள தமிழ்ச் சங்க உறுப்பினர்களே! வணக்கம். 1998 ஆண்டு யூன் 27ம் திகதியில் இருந்து 1999ம் ஆண்டு ஒக்ரோபர் 31ம் திகதி வரை எமது சங்கம் ஆற்றிய பணிகளை 57வது ஆண்டுப் பொது அறிக்கையில் சமர்பிக்கின்றோம்.

### முன்னுரை

1. எமது சங்கம் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்ப்பணி ஆற்றிவருகின்றது. தமிழ்ச் சமூகத்தில் மானுட சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் மேம்படுத்தும் வகையில் கலை, இலக்கிய பண்பாட்டுத் தளத்தினை வளம்படுத்தும் நோக்கில் எமது நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் பாரிய பொறுப்பு எம்மீது சுமத்தப்பட்டுள்ளதனை நாம் உணர வேண்டியவர்களாவோம்.

   மேலும் தமிழ் மொழியின் விருத்தியை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமெனின் கலை, இலக்கியத்துடன் மட்டுமன்றி மானுடவியல், சமூகவியல், வரலாறு, தொல்லியல், உளவியல், அரசியல் நெறி, தத்துவம், பெருளாதாரம், நவீனத்துவம், சுற்றுச்சூழலியல் ஆகிய பன்முகப்பயன்பாட்டுத் தளங்களில் சிந்தனை செலுத்தி செயற்படுதல் சமகாலத்தில் முன் தேவையாகும்.

   பரந்தளவில் மக்கள் பங்கேற்புடன் தமிழ்ச் சங்கம் வலுவாகச் செயற்படுவதனால் மட்டுமே தமிழ்ச் சூழலில் பரந்த சமூகத் தாக்கத்தை விளைவிக்க முடியும் என்பது எமது அவதானிப்பாகும். மூத்தோர் மட்டுமன்றி இளைஞர், மகளிர், சிறார்கள் ஆகிய சமூகத்தின் பலதரப்பட்ட வகுப்பினரும் சங்கத்தின் செயற்பாடுகளில் இரண்டறக் கலந்து கொள்ளும் வகையில் நாம் வழிசமைக்க வேண்டும்.

   சங்கத்தின் செய்ற்பாட்டாளர்கள் ஆகிய நாம் ஜனநாயக மனோபாவத்துடனும் கூட்டுத் தலைமையுடனும், தனிமனித ஆளுமை பொறுப்புடனும் நடந்து கொள்ளவேண்டியவர்களாவோம் என்பது மட்டுமன்றி அவ்விலட்சிய வாழ்வை இம்மண்ணில் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டுமெனில் நாம் அனைவரும் அதனை அடையும் வழிமுறைகளில் தன் முனைப்பு, குழு வாதம், பிரதேச வாதம் ஆகிய பிணிகள் எம்மைப் பீடிக்காமல் சுதந்திரம், சமத்துவம்

சகோதரத்துவம் ஆகிய ஜனநாயக கோட்பாட்டில் நாம் வேரூன்றி எமது உலகியல் அணுகுமுறையாக 'எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓர் நிறம், எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்பதனை நாம் ஏற்றுக்கொண்டு எமக்கிடையில் சுய விமர்சனம், விமர்சனம் ஆகியவற்றை ஆக்கபூர்வமாக - சிநேக பாவத்துடன் ஆற்றுப்படுத்தி கொழும்புத் தமிழ்ச் சங்கப் பெரும் ஸ்தாபனத்தை வலுப்படுத்த வேண்டியது எமது ஒவ்வொரு அங்கத்தவர்களதும், செயற் பாட்டாளர்களதும் தலையாய பண்பாட்டுப் பணியாகும்.

கடந்த 57 வருடங்களாக இச் சங்கம் தமிழ் பேசும் மக்களின் கலை இலக்கிய, பண்பாட்டு வளர்ச்சிக்காக கொழும்பிலும் இலங்கையின் பல பாகங்களிலும் பல அரிய முயற்சிகளை செயற்படுத்தி வருகின்றது.

### தமிழ்ச்சங்க உறுப்பினர் தொகை

| | | |
|---|---|---|
| 1 | ஆயுள் உறுப்பினர் | 270 |
| 2. | சாதாரண உறுப்பினர் | 155 |

(புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட அங்கத்தவர் பட்டியல்) (இணைப்பு 1)

குறிப்பிட்ட இக்காலப் பகுதியில் தமிழ்ச்சங்கம் தன்னால் முடிந்தளவு முயற்ச்சிகளை மேற்கொண்டு வந்துள்ளது. தமிழ் பேசும் மக்களின் தற்போதைய உணர்வுகளை மதிக்கும் வகையில் நிகழ்ச்சிகளை ஆற்றுப்படுத்தி வருகின்றோம். இக்காலப்பகுதியில் சங்கத்தின் முன் பகுதிக் கட்டிடத்தையும் பின்பகுதிக் கட்டிடத்தையும் இணைத்த நடுப்பகுதி இணைப்புக் கட்டிடத்தின் முதலாம் மாடிக் கட்டிடத்தை எமது முன்னாள் சங்கத்தலைவர் திரு. பொ. சங்கரப்பிள்ளை அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் கட்டி உதவ முன்வந்தமை குறிப்பிடற்குரியதாகும். 25.07.98 அன்று டாக்டர் நாஜ் நாகேந்திரம் சங்கத்திற்கு சமூகமளித்து இக்கட்டிடத்தின் கட்டிடத் தொடர் பணிகளை முன்னெடுக்க வழிசமைத்தார்.

### ஆண்டுப் பொதுக் கூட்டம்

திரு. இ. சிவகுருநாதன் அவர்களின் தலைமையில் ஆண்டுப் பொதுக் கூட்டம் 26.06.98 மு.ப.10.00 மணிக்குச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. 56வது பொதுக் கூட்ட அறிக்கை பொதுச் செயலாளர் திரு. சோ. தேவராஜா அவர்களினால் வாசிக்கப்பட்டது. (அங்கத்தவர்கள் விபரம் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 02).



5. குறிப்பிட்ட காலப்பகுதியில் நடந்த விசேட பொதுக் கூட்ட ஆட்சிக் குழுக் கூட்டம் ஏனைய குழுக் கூட்ட விபரங்கள் வருமாறு :-

### 5.1 விசேட பொதுக் கூட்டங்கள்

(i) 30.05.99 ஒத்தி வைக்கப்பட்ட விசேட பொதுக் கூட்டம் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. இ. சிவகுருநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு 35 அங்கத்தவர்கள் சமூகம் கொடுத்திருந்தனர். இவ் விசேட பொதுக் கூட்டத்தில் 96 - 97 ஆண்டு கணக்கறிக்கையும் 97 - 98ம் ஆண்டு கணக்கறிக்கையும் பொருளாளர் திரு. தி. கணேசராஜா அவர்களினால் சமர்ப்பிக்கப் பட்டது. சபையோர் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். இதன் மூலம் கணக்கறிக்கை காரணமாக சங்க முயற்ச்சிகள் தாமதமடைவது தவிர்க்கப்படுவதுடன் வருடக் கணக்குகள் சீர் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். பழைய கணக்குகள் யாவும் சீர் செய்யப் படுவதில் பொருளாளர் திரு. தி. கணேசராஜா அவர்களின் பணி சிறப்புக்குரியதாகும்.

(ii) **05.09.1999 விசேட பொதுக் கூட்டம்**

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. இ. சிவகுருநாதன் அவர்கள் தலைமையில் விசேட பொதுக் கூட்டம் நடைபெற்றது. 41 அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தில் திருத்தி யமைக்கப்பட்ட யாப்பு, யாப்புக் குழுச் செயலாளர் திரு. க. நீலகண்டன் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்யாப்பு பல திருத்தங்களுடன் சபையோரால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

5.2 ஆட்சிக் குழுக் கூட்டங்கள் 15

5.3 ஏனைய குழுக் கூட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| (i) | இலக்கியம் | - | 16 |
| (ii) | கட்டிடம் | - | 19 |
| (iii) | நூல் நிலையம் | - | 07 |
| (iv) | யாப்புத் திருத்தம் | - | 08 |
| (v) | உறுப்புரிமை | - | 07 |
| (vi) | கல்வி | - | 09 |

சங்க நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெற இலக்கியம், கல்வி, நூல் நிலையம், கட்டிடம், உறுப்புரிமை, யாப்புத் திருத்தல், தொடர்பான குழுக்கள் காலத்திற்கு காலம் கூடி ஆக்கரீதியான திட்டங்களைத் தீட்டி, சங்க நடவடிக்கைகள் சிறப்புற நடைபெற உறுதுணையாய் இருந்துள்ளன. இக்குழுக்களின் செயலாளர்களும், உறுப்பினர்களும் வழங்கிய ஆக்கரீதியான ஆலோசனைகளும் செயற்பாடுகளும் சங்கச் செயற்பாட்டிற்கு வலுவைச் சேர்த்துள்ளன.

6. **நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகள்**

பின்வரும் நிகழ்ச்சிகளுக்கு எமது தமிழ்ச்சங்கத் தலைவர் திரு. இ. சிவகுருநாதன் அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்புறச் செய்தார்.

7. **இலக்கியக் குழுவினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகள்**

கவிஞர் வாரம் 06.07.98 முதல் 12.07.98 வரையும் நடைபெற்றது. ஈழத்துக் கவிஞர்கள் நினைவுகூரப்பட்டதோடு அவர்களின் திருவுருவப் படங்களும் திரைநீக்கம் செய்யப்பட்டன.

(i) 06.07.98 திங்கள் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்களின் திருவுருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. பிரதம அதிதியாகத் தினக்குரல் ஆசிரியர் திரு. ஆ.நேசச்செல்வன் அவர்கள் கலந்து கொண்டார். திரு. த. கனகரத்திரனம் அவர்களால் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.

(ii) 07.07.98 செவ்வாய்கிழமை கவிஞர் சோ. நடராஜா அவர்களின் திருவுருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. திரு. வி. ஏ. திருஞானசுந்தரம் அவர்கள் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார். முன்னாள் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. செ. குணரத்தினம் அவர்கள் சிறப்புறச் சொற்பொழிவு ஆற்றினார். சப்ரகமுவ பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

(iii) 08.07.98 புதன்கிழமையன்று சமகாலத்தில் வாழும் கவிஞரான புலவர் மணி ஆ. மு. ஷரிபுத்தீன் அவர்களின் திருவுருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. சிறப்பு அதிதியாக வித்துவான் க.ந. வேலன் அவர்கள் கலந்து கொண்டார். ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர் அல்ஹாஜ் எம். வை. எம். முஸ்லிம் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.



(iv) 09.08.98 வியாழக்கிழமை கவிஞர் மஹாகவி து. உருத்திரமூர்த்தி அவர்களின் திருவுருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. தினகரன் பிரதம ஆசிரியர் திரு. இராஜசிறிகாந்தன் அவர்கள் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார். திரு. தா சண்முகநாதன் அவர்கள் கோடை, நாடகத்தின் சில காட்சிகளை நிகழ்த்திக் காட்டினார். திரு. இ. ஜெயராஜ் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

(v) 10.07.98 வெள்ளிக்கிழமை கவிஞர் சில்லையூர் செல்வராஜனின் திருவுருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. திரு. எஸ்.கே. பரராஜசிங்கம் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். கவிஞர். ஏ. இக்பால் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். திரு. அருணாசெல்லத்துரை அவர்கள் தயாரித்து வழங்கிய கவிதா நிகழ்வுகள் இடம் பெற்றன.

(vi) 11.09.98 சனிக்கிழமை கவிஞர் நீலாவணன் (திரு.சின்னத்துரை) அவர்களின் திருவுருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. திரு. குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார். திரு. த. கோபாலகிருஸ்ணன் சிறப்புச் சொற் பொழிவாற்றினார். திரு. சி. எழில்வேந்தன் அவர்கள் தயாரித்து வழங்கிய நீலாவணன் ஆக்கிய பாவம் வாத்தியார் என்னும் தலைப்பில் கவிதா நிகழ்வு இடம் பெற்றது. செல்வி. மங்களகௌரி விராகநாதன் அவர்கள் தயாரித்து வழங்கிய ''நீலவணனின்'' ''போடிமகள் பொன்னம்மா'' என்னும் தலைப்பில் கலை நிகழ்வு இடம் பெற்றது.

(vii) 6ம் நாள் நிகழ்வின் போது இலக்கியச் செயலாளர் ஜனாப். ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களின் தலைமையில் கவியரங்கு நடைபெற்றது. இந்த 6ம் நாள் நிகழ்வில் பிரதமவிருந்தினராக திரு. ஆர். யோகராஜன் அவர்கள் கலந்து கொண்டார்.

7.2 பாரதி நினைவு விழா 11.09.98ல் நடாத்தப்பட்டது. இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக திரு. இ. ஜெயராஜ் அவர்கள் கலந்து கொண்டார் செல்வி. இந்துஜா கணேசராஜா தமிழ் வாழ்த்து பாடினார். பாரதிக்குப்பின் தமிழ்க்கவிதை என்னும் தலைப்பில் சிதம்பரப்பிள்ளை சிவகுமார் சிறப்புரையாற்றினார்.

7.3 05.12.98 முன்னாள் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவரும் முன்னாள் நீதியரசருமான கலாநிதி எச். டபிள்யூ தம்பையா அவர்களின் உருவப்படத்திரை நீக்கமும், நினைவுப்பேருரையும் நடைபெற்றன. உருவப்படத்தை முன்னாள் பிரதம நீதியரசர் கௌரவ எஸ்.

சர்வானந்தா அவர்கள் திரை நீக்கம் செய்து வைத்தார். நினைவுப் பேருரையை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் கௌரவ சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள் நிகழ்த்தினார். சிறப்புச் சொற்பொழிவினை கொழும்புத் தமிழ்ச் சங்க முன்னாள் தலைவர் திரு. எஸ். குணரத்தினம் அவர்கள் நிகழ்த்தினார்.

7.4 15.07.99 பி.ப. 4மணிக்கு கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் உழவர் திருநாள் கவியரங்கு நடைபெற்றது. இக்கவியரங்கு திரு. இ. தயானந்தா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

பின்வரும் கவிஞர்கள் இக்கவியரங்கில் பங்கு பற்றினர். சி.சிவகுமார், இ.பார்வதி, மேமன் கவி, கிண்ணியா அமிர் அலி, சிவசங்கர், வை.தேவராணி, மாவை வரோதயன், த.கோபால கிருஷ்ணன்.

7.5 07.02.99 திரு. எம். எம். உவைஸ் அவர்களின் நினைவு விழாவும் படத்திரை நீக்கமும் இடம் பெற்றன. அல்ஹாஜ் எஸ். எம். கமால்தீன் சட்டத்தரணி அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா ஆகியோரால் நினைவுச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. நினைவுக் கவிதாஞ்சலியை திரு. த. கனகரத்தினம் அவர்கள் நிகழ்த்தினார்.

7.6 யூன் 99ல் கொழும்பு மாநகர மாணவர்களுக்கு இடையிலான திருக்குறள் சம்பந்தமான பேச்சு விவாதம், ஓவியம், முதலிய போட்டிகள் பாடசாலை அதிபர்களின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டன. செல்வி. க. சிறீகுமாரி அவர்கள் இந்நிகழ்வுகளைச் சிறப்புற ஒழுங்குபடுத்தினார்.

7.7 26.06.99 பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் நினைவு விழா நடைபெற்றது. பேராசிரியர் சி. பத்மநாதன், பண்டிதர். க. உமாமகேஸ்வரன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

7.8 16.09.99 அன்று வன்னிவிழா வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தில் நடைபெற்றது. வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. கணேஸ் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இவ்விழாவில் 1995ல் நடைபெற்ற தமிழ் மொழித் திறன் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன இந்நிகழ்வில் சங்கத்தின் சார்பில் தலைவர், பொருளாளர், ஆகியோருடன் திரு. சி. கந்தசாமியும் கலந்து கொண்டார்.



7.9 பேராசிரியர் திரு. சி. மௌனகுரு அவர்களின் மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள் எனும் நூல் பற்றிய அறிமுக விழா 12.09.99 அன்று நடைபெற்றது.
இலக்கியக் குழுச் செயலாளர் ஜனாப். ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களினதும் ஏனைய குழு உறுப்பினர்களதும் முயற்சியினால் இந்நிகழ்ச்சிகள் திறம்பட அமைந்தன.

## 8. கல்விக் குழுவினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகள்.

8.1 20.02.99 முதல் 21.02.99 வரை இலங்கையில் உள்ள பண்டிதர், புலவர், வித்துவான்களை கௌரவிக்கும் முகமாக பண்டிதர், புலவர், வித்துவான் மாநாடு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது.

முதலாம் நாள் நிகழ்ச்சியின் முக்கிய நிகழ்வாக திருவள்ளுவர், பாரதியார், விபுலானந்தர், நாவலர் உருவச்சிலைகள் காலி வீதியில் இருந்து மங்கள வாத்தியம் முழங்க, ஊர்தியில் ஊர்வலமாகப் பவனி வந்ததோடு தொண்டர் வித்தியாலய மாணவர்கள் மேற்படி பெரியோர்களின் வேடம் தரித்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். கௌரவிக்கப்பட்ட பண்டிதர்களும் ஊர்வலத்தின் முன்னணியில் அழைத்து வரப்பட்டனர்.

முதலாம் நாள் நிகழ்வுகள் நாவலர் அரங்கில் இடம் பெற்றன. பிரதம விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ். தில்லைநாதன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் திரு. வி. என். மதியழகன் அவர்களும் கலந்து கொண்டார்.

நாவலர் வளர்த்த மரபுத் தமிழ் என்னும் தலைப்பில் உப தலைவர் திரு. குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் உரை நிகழ்த்தினார். இதற்கான கருத்துரையை திருமதி. இ. பார்வதி வழங்கினார். “இலக்கண வரம்புயர இலக்கியப் பயிர் உயரும்” என்னும் தலைப்பில் திரு. ஆ. சிவநேசச் செல்வனின் உரையும், குறுந் தொலைக்காட்சி எனும் தலைப்பில் பண்டிதர் கனகசபை சிவகுருநாதனின் உரையும் இடம் பெற்றன. கொழும்புத் தமிழ்ச் சங்க உப தலைவர் திரு. இரா. மயில்வாகனம், ஆசிரிய ஆலோசகர் திருமதி. செல்வராணி தேவநாயகம் ஆகியோரின் கருத்துரைகளும் இடம் பெற்றன.

21.02.99 இல் இரண்டாம் நாள் நிகழ்வுகள் விபுலானந்தர் அரங்கில் இடம் பெற்றன. இந்நிகழ்வின் போது இயற்றமிழ் வித்தகர் என்ற

பட்டம் சூட்டிப் பின்வருவோர் கௌரவிக்கப்பட்டனர்.

(1) பண்டிதர் திரு. ச. சுப்பிரமணியம்
(2) பண்டிதர் திரு. க. சிவகுருநாதன்
(3) பண்டிதை செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
(4) பண்டிதர் திரு. எம். ஏ. ரஹ்மான்

இரண்டாம் நாள் நிகழ்வின் பிரதம விருந்தினராகப் பேராசிரியர் எஸ். பத்மநாதன் அவர்கள் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக அறங்காவலர் திரு. தி. செந்தில்வேள் அவர்களும் அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜமில் அவர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் "புலமையின் சிகரம் கண்டவர்" என்னும் தலைப்பில் முன்னாள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. வை. கா. சிவப்பிரகாசம் அவர்களும், "சிங்கள இலக்கியத்தில் தமிழின் செல்வாக்கு" என்னும் தலைப்பில் திரு. த. கனகரத்தினம் அவர்களும், "கலித்தொகை" என்னும் தலைப்பில் திருமதி. பூ. ஏனாதிநாதன் அவர்களும் உரை நிகழ்தினார்கள். இத்துடன் செல்வி. விக்னா செல்வநாயகம், திருமதி. ச. சறோஜினி தேவி அருணாசலம், சட்டத்தரணி குழந்தைவேலு இராஜகுலேந்திரன் அவர்களும் கருத்துரை வழங்கினார்கள்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் வி. என். மதியழகனின் உதவியினால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தினால் ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

## 8.2 மக்கள் நலன்பேண் நிகழ்வுகள்

(i) தொண்டர் வித்தியாலய உப அதிபர் கே. சந்திரலிங்கம் அவர்களால் 1.10.98 இல் யோகாசனப் பயிற்சி வகுப்பும் செய்முறைக் கண் காட்சியும் நடாத்தப்பட்டது. இதில் 45 பேர் பங்குபற்றினர்.

(ii) 24.10.98 இல் "சரிவிகித உணவு" சம்பந்தமான குழுநிலைக் கலந்துரையாடல் நடைபெற்றது. ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீட முதுநிலை விரிவுரையாளர் டாக்டர் சிவயோகன், திருமதி. தி. விநாயகமூர்த்தி, திரு. கா. வைத்தீஸ்வரன் முதலானோர் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள்.

(iii) 04.09.98 இல் இருந்து இருவாரங்களுக்கு ஒருமுறை (வெள்ளிக் கிழமைகளில்) முற்பகல் வேளையில் அதி இரத்த அமுக்கப் பரிசோதனை இளைப்பாறிய வைத்திய அதிகாரி டாக்டர் என். கந்தையா அவர்களால் நடாத்தப்படுகின்றது. இடம் பெயர்ந்த மக்கள் அச்சேவையால் பெரிதும் பயன் அடைந்து வருகின்றார்கள்.



8.3 10.4.98 இல் இருந்து பாலபண்டித பிரவேச வகுப்புகள் சங்கத்தில் நடாத்தப்பட்டு வருவது முக்கிய அம்சமாகும். திரு. த. கனகரத்தினம், பண்டிதர். திரு. க. சிவகுருநாதன், புலவர் அ. திருநாவுக்கரசு, பண்டிதர் திரு. க. உமாமகேஸ்வரன் முதலானோர் இதற்கான ஆசிரியர் குழாமில் பங்கேற்று இவ்வகுப்புக்களை இலவசமாக நடாத்தி வருகிறார்கள். ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் இவர்களுக்கான பரீட்சைகளை நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றது. வெளிமாவட்டங்கள், கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றும் வசதிக்கேற்ப கொழும்புத் தமிழ்ச்சங்கத்தை மத்திய நிலையமாக அமைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 8.4 அறிவோர் ஒன்று கூடல்

(i) கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் 06.9.98 இல் இருந்து பிரதி புதன் கிழமைகள் தோறும் பி.ப. 5.30 மணி தொடக்கம் 7.30 மணிவரை இவ்வறிவோர் ஒன்று கூடல் நிகழ்ச்சி நடைபெற்று வருகின்றது. 15.09.98இல் இந் நிகழ்வின் பொன்விழா கொண்டாடப்பட்டது. கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. இ. சிவகுருநாதன் அவர்கள் பல நெருக்கடியான வேலைகள் இருந்த போதும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளத் தவறுவதில்லை. திரு. த. கனகரத்தினம், பண்டிதர். க. சிவகுருநாதன், புலவர். அ. திருநாவுக்கரசு ஆகியோர் பிரதி வாரங்கள் தோறும் சமூகமளித்து அந்நிகழ்வைச் சிறப்பிப்பர். ஒவ்வொரு பிரதிப் புதன்கிழமையும் திருக்குறளில் இருந்து ஒவ்வோர் அதிகாரத்தையும் அடிப்படையாகக் கொண்டதாக இந்நிகழ்வு இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ii) வாராவாரம் சங்கத்தில் நடைபெற்று வருகின்ற நிகழ்ச்சி, "அறிவோர் ஒன்று கூடல்" எனக் கூறலாம். இந்நிகழவில் புலவர். திரு. சு. செல்லத்துரை, திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்), திரு. ஆறுதிருமுருகன், பண்டிதர். க. உமாமகேஸ்வரன், பண்டிதர். திரு. சி. அப்புத்துரை, திரு. சோ. பத்மநாதன் முதலானோர் பங்கு பற்றிச் சிறப்புரை நிகழ்த்தியுள்ளனர்.

(iii) சங்க உறுப்பினரும் சமாதான நீதவானுமாகிய திரு. நா. நடராஜா அவர்கள் இந்நிகழ்வுகளின் முன்னணிச் செயற்பாட்டாளராவார். பின்வருவோர் இந்நிகழ்ச்சிக்கு தவறாது சமூகம் கொடுக்கும் இலக்கிய ஆர்வலர்கள் ஆவர்.

*செல்வி. பொ. செந்தமிழ்ச் செல்வி*
*திருமதி. தே. கலாலஷ்மி*
*திரு. தி. சிவசாமி*
*திரு. சு. பரமநாதன்*
*திரு. எ. வி. இராசரத்தினம்*
*திரு. இ. சிறீஸ்கந்தராசா*
*திரு. மு. வேலுப்பிள்ளை*
*திரு. ச. முத்துக்குமாரசாமி*
*திரு. எ. என். யோகநாதன்*
*திரு. செ. குமாரசாமி*
*திருமதி. கு. சிந்தாமணி*
*திரு. சி. க. சிவயோகநாதன்*
*திருமதி. வ. தேவராணி*
*திரு. என். சுவர்ணலிங்கம்*
*திரு. ஆர். கனகசபாபதி*
*திரு. சி. அமிர்தலிங்கம்*
*திரு. சி. அருட்பிரகாசம்*
*திரு. சி. பரமானந்தம்*
*திரு. நீலகண்டன்*
*திரு. க. தேவநேசன்*

8.5 9.10.99, 24.10.99 ஆகிய தினங்களில் இடம் பெயர்ந்த தமிழ் மக்களின் சமகாலச் சமூகச் சிக்கல்கள் பற்றி, சமூக சேவையாளர்கள், பொதுப் பணி மாற்றங்களின் பிரதிநிதிகள் முதலானோருக்குக்கான கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. தற்போதைய போர்க்காலச் சூழலினால் மக்களின் உள நெருக்கீடும், அதற்கு முகம் கொடுக்கும் வழிமுறைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன. பேராசிரியர் டேவிட் இரத்தினவேல் விசேட ஆலோசகராகக் கலந்து கொண்டார்.

கல்விக் குழுச் செயலாளர் திரு. ஆ. கந்தசாமி அவர்களினதும் ஏனைய குழு உறுப்பினர்களதும் முயற்ச்சியினால் கல்விக்குழுவினரின் செயற்பாடுகள் திறம்பட நடைபெற்றுள்ளன

### 09. கட்டிடக் குழுவின் பணிகள் :

9.1 சங்கரப்பிள்ளை மண்டபத்தின் முதலாம் மாடி கொங்கிறீற் வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. கூடிய விரைவில் இக்கட்டிடம் பூர்த்தியாக்க முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. சங்கரப்பிள்ளை மண்டபத்தில் அமைய இருக்கும் நூலகத்தை நவீன வசதிகளுடன் வடிவமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



### 9.2 கட்டிடப் பராமரிப்பு

கட்டிட முன் தொகுதியில் உள்ள யன்னல்கள் துருப்பிடித்த நிலையில் இருந்தன. அவைகள் உரசி மை பூசப்பட்டுள்ளன. இவ் யன்னல் களுக்கு பலவருடங்களின் பின் நிற மை பூசப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**சங்க உறுப்புரிமை**

சங்கத்தின் மேற்கு எல்லை மதில் கட்டியமைக்கப்பட்டுள்ளது இக்கட்டிட வேலைகள் சிறப்புற அமைவதற்கு கட்டிடக்குழுச் செயலாளர் திரு. ஜே. திருச்சந்திரனும் கட்டிடக் குழுவினரும் அயராது உதவி வருகின்றனர்.

10. குறிப்பிட்ட காலப்பகுதியில் சங்கத்தில் 37 அங்கத்தவர்கள சாதாரண அங்கத்தவர்களாகவும் 7 அங்கத்தவர்கள் ஆயுள் உறுப்பினர் களாகவும் சேர்த்துக் கொள்ளபட்டனர். திரு. கே. கே. உதயகுமார் 21.02.99 திகதி வரை உறுப்புரிமைச் செயலாளராக கடமையாற்றினார். தற்பொழுது திரு. சி. கந்தசாமி அவர்கள் உறுப்புரிமைச் செயலாளராகக் கடமையாற்றி வருகின்றார்.

உறுப்புரிமை செயலாளரும், சகஅங்கத்தவர்களும் சிறப்புறச் செயற்பட்டு வருகின்றார்கள்.

(புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட அங்கத்தவர் பட்டியல் இணைப்பு - 3)

### 11. நூலகக்குழு

குறிப்பிட்ட காலப்பகுதியில் திரு. எஸ். எம். கமால்டீன் நூலாகச் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர், நூலகக்கோவையாளர் செல்வி. க. கமலாம்பிகை அவர்களின் ஆலோசனைகளின் பிரகாரம் இந் நூல் நிலையம் மறுசீரமைகக்கப்பட்டு வருகிறது. நூல்கள் வகைப்படுத்தல் அதற்குரிய இலக்கமிடுதல் முதலான வேலைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. புதிய கட்டிடத்தில் சங்கரப்பிள்ளை மண்டபம் அமைய இருக்கிறது.

**நூலகச் சேவைகள்**

(i) எமது நாட்டில் தற்போது உள்ள நூல் நிலையங்களில் கொழும்புத் தமிழ் சங்கத்திலுள்ள நூல் நிலையமும் ஓர் சிறந்த நூல் நிலையமாகக் கருதப்படுகிறது. மிகவும் அரிதான பழமையான நூல்கள் இந்நூல் நிலையத்தில் உள்ளன. இன்றுவரை (29.10.99) இந்நூல் நிலையத்தில் 18,085 புத்தகங்கள் உள்ளன. தற்போது இந்நூல் நிலையம் கிழமையில் ஏழு நாட்களும் மு.ப. 9.00 - பி.ப.

6.00 மணிவரை திறந்திருப்பதனை ஓர் வரப்பிரசாதமாகக் கருத முடியும். இந்நூல் நிலையத்தில் தற்போது 1212 அங்கத்தவர்கள் அங்கம் பெறுகிறார்கள். குறிப்பிட்ட காலப்பகுதியில் சேர்ந்துள்ள அங்கத்தவர் தொகை 477 ஆகும். இக்காலப்பகுதியல் 250க்கு மேற்பட்ட புத்தகங்கள் அன்பளிப்பாகச் சேர்ந்துள்ளன.
(விபரம் இணைப்பு 3)

**நூலக அன்பளிப்பு இணைப்பு - 4**

11.2 30.9.98 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நூல் நிலையத்தில் சிறுவர் பகுதி ஆரம்பிக்கப்பட்டது. அல்ஹாஜ் எஸ். எம். கமால்டீன் அவர்கள் சிறப்பு அதிதியாகக் கலந்துக் கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

11.3 குறிப்பிட்ட காலப்பகுதியில் 250 புத்தகங்கள் தமிழ்சங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்டன. நூல் நிலையத்தில் புத்தகங்கள் சீர் செய்யப்பட்டு, மீள ஒழுங்கு வரிசை அடிப்படையில் அடுக்கப்பட்டுள்ளன. நூல் நிலையம் மீள் ஒழுங்கு செய்யும் முயற்சியில் திரு. மா. சடாட்சரம் திரு. சி. சரவணபவன் ஆகிய இருவரும் தொண்டர் அடிப்படையில் இந்நூல்களை வரிசைக்கிரமமாக அடுக்குவதற்கு பெருமுயற்சி எடுத்திருகிறார்கள். இவர்களுடன் சங்கத் தொண்டர்களும் காலத்திற்குக் காலம் பலசிரமதான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறார்கள்.

11.4 **நூலக சேவையும் படிப்பகமும்**

நூலகத்தைக் கூடிய அளவு இளைஞர்கள் பிரயோசனப்படுத்தக் கூடிய வகையில் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அவர்கள் நூலகத்தையும் குறிப்பாக தமிழ்ச்சங்க நடவடிக்கைகளிலும் பங்கு கொள்ளும் நிகழ்ச்சிகளை முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. நூலக வளர்ச்சியில் நூலகக்குழுச் செயலாளர். திரு. த. கோபாலகிருஸ்ணன் அவர்களும் அக்குழு அங்கத்தவர்களும் சிறப்புறப் பணி யாற்றியுள்ளனர். நூலகர்களாகிய திருமதி. அ. ஜெயஸ்ரீ, செல்வி. த. ஜெயமாலா ஆகியோர் திறம்படவும், உற்சாகமாகவும், செயற்பட்டு வருகின்றார்கள்.

12. **யாப்புதிருத்தக்குழு**

சங்கத்தின் யாப்புத்திருத்தக்குழுவினர் அவ்வப்போது ஒன்று கூடி சமகாலச் செயற்பாட்டுத் திறன்மிக்க, பன்முகப்பட்ட வளர்ச்சிக் கேற்ப, திருத்தங்களை முன்வைத்துச் செயற்பட்டு வந்துள்ளனர். இத்திருத்தப்பட்ட யாப்பு விஷேட பொதுக் கூட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.



இக்குழுவில் திரு. க. நீலகண்டன் அவர்களும் ஏனைய உறுப்பினர்களும் ஆர்வத்துடன் செயற்பட்டு திறம்படச் செயலாற்றியுள்ளனர்.

13. **தமிழ் நாட்டு அறிஞர்கள் வருகையும் சந்திப்பும்**

1. பேராசிரியர் ம. இராஜேந்திரம் அவர்கள் கொழும்புத் தமிழ் சங்கத்திற்கு 31.08.98 ல் வருகை தந்திருந்தார். எழுத்தாளர் சந்திப்பும் தேனீர் விருந்தும் நடாத்தப்பட்டன.
2. 12.08.98 இல் சென்னைப் பல்கலைக்கழக பேராசிரியர் திரு. வி. அரசு அவர்களுடன் எழுத்தாளர்கள் சந்திப்பும் தேனீர் விருந்தும் இடம்பெற்றன.
3. 98.3.99 இல் அறிஞர் திரு. பெ. சு. மணி அவர்களின் இலக்கியச் சொற்பொழிவு இடம் பெற்றது.
4. 27.11.98 இல் பேராசிரியர் லூரத்த், இந்திரா ரஞ்சன் ஆகியோருடன் கருத்தாடலும் தேனீர் விருந்தும் இடம் பெற்றன.
5. 04.10.99 இல் மணிமேகலைப் பதிப்பகத்தைச் சேர்ந்த திரு. ரவி. தமிழ்வாணன் அவர்களுக்கு தேனீர் விருந்து அளிக்கப்பட்டது.
6. 17.06.98 அன்று மு. மேத்தா அவர்களின் சிறப்புரை நிகழ்த்தப்பட்டது.
7. 25.10.99 ல் பேராசிரியர் சூடாமணி நந்தகோபால், கலாநிதி துளசி இராமச்சந்திரன் ஆகியோரின் சிறப்புரைகள் இடம் பெற்றன.

**14. ஏனைய நிகழ்ச்சிகள்**

1. 11.10.98 ல் திரு. ஆறுதிருமுருகன் அவர்களின் "தமிழ் இலக்கியத்தில் பெண்கள்" என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம் பெற்றது.
2. 25.4.99 அன்று கொழும்புத் தமிழ் சங்க உப தலைவர் செல்வி சற்சொரூபவதி நாதன் அவாகளுக்கு தேனீர் விருந்தும், பாராட்டு விழாவும் நடாத்தப்பட்டது.
3. 3.7.99 கண்ணதாசனின் நினைவு விழா கொண்டாடப்பட்டது. காலி வீதியில் இருந்து திருவள்ளுவா சிலைகள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு விழா இறுதியில் கொழும்பு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு இச்சிலைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

4. இலக்கியச் செயலாளர் ஜனாப் ஜின்னாஹ், ஷரிபுத்தின், காப்பாளர் எஸ். எச். எம். ஜமில் ஆகியோருக்கு தமிழ்நாடு இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கழகத்தின் 46வது ஆண்டு இஸ்லாமிய தமிழ் இலக்கிய பெருவிழாவில் "தமிழ்நாடு" அமைச்சர் தமிழ் குடிமகன் அவர்களினால் 13.12.98 ல் "தமிழ்மாமணி" விருது இவர்களுக்கு வழங்கப்பட்டது. இதனை கௌரவிக்குமுகமாக 29.2.99 அன்று இவர்களைப் பாராட்டித் தமிழ்ச் சங்கத்தில் தேனீர் விருந்து நடைபெற்றது.

5. 1.1.99 புலம் பெயர்ந்த நாடகக் கலைஞர்கள் திரு. க. பாலேந்திராவும் துணைவியார் ஆனந்தராணியும் இலண்டனில் இருந்து வருகை தந்திருந்தார்கள். சிறுவர் நாடகப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. 30 சிறார்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து இவ்வாறான நாடகப்பட்டறைகள் நடைபெறவேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர்.

6 **திருமறைக் கலாமன்றம்**

திருமறைக் கலாமன்றத்தின் வண.பிதா. மரியசேவியார் அடிகளாரின் தலைமையில் ஐரோப்பிய நாடக சுற்றுலாவை முடித்துக் கொண்டு இலங்கை திரும்பிய எமது நாட்டுக் கலைஞர்களுக்கு பாராட்டும், தேனிர் விருநதும் நடாத்தப்பட்டது. அவர்களின் அளப்பரிய சேவைகள் பற்றி கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

7. **நன்கொடைகள் இணைப்பு - 05**

15. **சங்க அலுவலகம்**

சங்க அலுவலகத்தில் வேலைகள் சிறப்பாக அமைநதுளளமை குறிப்பிடப்பட வேண்டிய அம்சமாகும். திரு. த. கணேசன் அவர்கள் 2.5.99 தொடக்கம் அலுவலக உதவியாளராக ஒப்பந்த அடிப்படையில் நியமனம் பெற்றுள்ளார். இவர் மிகவும் உற்சாகத்துடன் செயற்பட்டு வருகிறார்.

நிர்வாகச் செயலாளர் திரு. கா. வைத்தீஸ்வரன் அவர்கள் கண்துஞ்சாது காலநேரம் பாராது எமது அன்றாட நிகழ்ச்சசிகளில் உற்சாகத்துடன் இயங்கி வருகின்றார். நூலகக்காரர்களாகிய திருமதி. அ. ஜெயஸ்ரீ செல்வி. த. ஜெயமாலா ஆகியோர் திறம்படவும் உற்சாகமாகவும் செயற்பட்டு வருகின்றார்கள். செல்வி. ம. ஹம்சகௌரி தட்டெழுத்தாளராக இருந்தபோதும் சங்கதின் சகல நடவடிக்கைகளிளும் அயராது உழைத்து வருகின்றார்.

திரு. யா. பாண்டா. என்னும் தொழிலாளி எமது சங்க வளவு, மண்டபம் ஆகியவற்றை சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருப்பதற்கு உரிய செயற்பாடுகளை தொடர்ந்து செய்து வருகின்றார்.



16. **பொது மக்கள் ஆலோசனைகளும் மதிப்பீடும்**

எமது சங்கம் இன்னும் பல துறைகளில் முன்னேற இடம் உண்டு தற்போது நடைபெற்றுக் கொண்டு இருக்கும் முயற்சிகளை இன்னும் மேம்படுத்துவதற்கு இடமுண்டு. ஆக்கரீதியாக குறைகளை நிவர்த்தி செய்யக் கூடிய ஆலோசனைகளைத் தந்துதவுமாறு அன்புடன் அழைக்கின்றோம். எம்மைப்பற்றி குறை நிறைகளை உடனுக்குடன் ஆலோசனைப் பதிவேடுகளில் (நூலகம் + அலுவலகம்) தந்து உதவுமாறு வேண்டுகின்றோம். இதற்கென வைக்கப்பட்டுள்ள ஆலோசனைப் பெட்டிகளிலும் தங்கள் ஆலோசனைகளை வழங்கி உதவலாம்.

17. **நன்றியுரை**

(i) **ஓம்படையார் சபை** : சபைத்தலைவர் திருமதி. செல்வி. திருச்சந்திரன், செயலாளர் திரு. வே. கந்தசாமி மற்றும் ஓம்படையார் சபை உறுப்பினர்களினது செயற்பாடு சங்க முயற்சிகளைச் சரிவரச் செயற்படுத்துவதற்கு உறுதுணையாய் உள்ளது. ஓம்படையார் சபையினருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

(ii) சங்கரப்பிள்ளை மண்டபம் (தற்போது கட்டப்படும் மண்டபம் முதலாம் மாடி) கட்டிட வேலைககள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. 4000 சதுர அடிக்கு மேற்பட்ட இம்மண்டபத்திற்கு கொங்கிறீற் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. முன்னைய தலைவர். பொ. சங்கரப்பிள்ளை அவர்களின் குடும்பத்தினர் இக்காலப்பகுதியில் இதுவரை 12 லட்சம் ரூபா இக்கட்டத்திற்கு தந்துள்ளனர். மிகுதிக் கட்டிட வேலைகள் அக்குடும்பத்தினரின் ஒத்துழைபப்பால் நிறைவேற இருப்பது போற்றப்பட வேண்டிய அம்சமாகும். இவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

இக்கட்டிடத்தைச் சரிவர அமைப்பதற்கு கட்டிட ஒப்பந்தங்காரர் திரு. எஸ். இலகுப்பிள்ளை அவர்கள் தாராள மனத்துடன் இக்கட்டிடம் நிறைவுற ஒத்துழைப்பு வழங்குகிறார். அவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

(iii) தமிழ்ச் சங்கம் தமிழ் பேசும் மக்களின் சொத்து ஆகும். தமிழ் மொழி இலக்கிய வளர்ச்சி மாத்திரமல்லாமல் தமிழ் பேசும் மக்களின் முன்னேற்றத்தில் கூடிய அளவு ஈடுபடப் பல அரிய சேவைகளை ஆற்றுவதற்கு உறுதுணையாக இருந்த விடய ஆலோசகாகள், யாவருக்கும் எமது நன்றிகள்.

தொண்டர் சேவை அவசியமும் உணரப்பட்டது. கடந்த வருடம் பயிற்றப்பட்ட தொண்டர்களுக்கு இக்காலப் பகுதியில் மீளாய்வுப் பயிற்சி அளிக்கப்பட்டது. சிரமதான முயற்சிகள் கூட்ட ஒழுங்குகள், விழா ஒழுங்குகள், நிகழ்ச்சிகளின் பொது அனுசரணைகள் மண்டப ஒழுங்குகள் நூல் நிலையத்துப்பரவு ஒழுங்குகள் மூலம் சிறப்பாகக் கையாளப்பட்டு வருகின்றன. ஆசிரியரும், உறுப்பினரும் ஆகிய திரு. ம. சடாட்சரன் அவர்களும் திரு. சி சரவணபவன் அவர்களும் நூலகத்தை மறுசீரமைப்பதற்கு பல தினங்கள் தமது நேரத்தை செலவிட்டு ஆக்கரீதியான பணிகளை மேற்கொண்டனர்.

(v) தமிழ் சங்கத்தில் தொண்டு அடிப்படையில் பல இளைஞர்களும் மூத்தோரும் பலவிதமான ஆக்கரீதியான முயற்சிகளை ஆற்றிவருகின்றனர். இவர்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

ஏனைய சங்கக்காப்பாளர், பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களும் ஏனைய துணைக் காப்பபாளர்களும் ஆக்கரீதியான பல சிந்தனைகளை காலத்திற்குக் காலம் முன் வைத்து வருகிறார்கள். அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

(vi) சங்க நடவடிக்கைகள் சிறப்புற அமைவதற்கு கல்வி, இலக்கியம், கட்டிடம், நூலகம், உறுப்புறுமை, யாப்புத் திருத்தங்கள், தொண்டர் குழுக்கள் காலத்திற்குக் காலம் கூடி ஆக்கரீதியான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன. சங்கச் செயற்பாடுகள் அனைத்திற்கும் இக் குழுக்களின் செயலாளர்களும், அங்கத்தவர்களும் ஆற்றி வந்துள்ள சேவைகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

(vii) **வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் பங்கு**

தமிழ்ச்சங்க செயற்பாடுகள் பற்றியும், நிகழ்சிகள் பற்றியும், பல ஆக்கரீதியான செய்திகளையும், விமர்சனங்களையும், கட்டுரைகளையும் வெளியிட்டு உதவிய வீரகேசரி, தினக்குரல், தினகரன் பத்திரிகை நிறுவனங்களுக்கு எமது உளம் கனிந்த நன்றிகள்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பண்டிதர் புலவர் வித்துவான் மாநாட்டின் போது இவ்விழாவினை நேரடியாக அஞ்சல் செய்தமைக்கு பெருமையுடன் நன்றி கூருகின்றோம். மற்றும், ஐ.ரி. என் ரூபவாஹினி கூட்டுத்தாபனம், சக்தி முதலான ஸ்தாபனங்கள் சங்கம் தொடர்பான செய்திகளைக் காலத்திற்குக் காலம் ஒலி, ஒளி பரப்பி உதவியுள்ளன. அவற்றிற்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.



(IX) சங்கத்தின் தலைவரும் பொருளாரும் பலவிதமான நெருக்கடியான பணிகளின் மத்தியிலும், தமிழ்ச்சங்கப் பணிகளை மனதார ஏற்று வழிநடத்திய பாங்கு போற்றப்பட வேண்டிய ஒன்றாகும். ஆட்சிக் குழு உறுப்பினர்களின் அயராத விழிப்புணர்வும் ஆலோசனைகளும் உதவியுள்ளமையை குறிப்பிட விரும்புகின்றோம்.

**அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.**

## இணைப்பு - 1

### நடப்பு ஆண்டு ஆட்சிக்குழு

**காப்பாளர்**

பேராசிரியர் கா. சிவத்தம்பி

**துணைக் காப்பாளர்கள்**

(i) ஜனாப் S.H.A. ஜமீல்
(ii) பண்டிதர் இ. நமசிவாயம்
(iii) திரு. தெ. ஈஸ்வரன்
(iv) அருட்திரு. மரிய செவியா அடிகளார்
(v) திரு. வி. எஸ். துரைராசா

**ஓம்படையார் சபை உறுப்பினர்கள்**

(i) திரு. இரா. நடராசா
(ii) திருமதி. செ. திருச்சந்திரன்
(iii) திரு. வே. கந்தசாமி
(iv) திரு. K.K. கனகராசா
(v) திரு. K.K. சுப்பிரமணியம்

1. **தலைவர்**

திரு. இ. சிவகுருநாதன்

2. **பொதுச் செயலாளர்**

திரு. சோ. தேவராஜா

3. **உப தலைவர்கள்**

(i) திரு. கு. சோமசுந்தரம்
(ii) திரு. J. திருச்சந்திரன்
(iii) திரு. செ. குணரத்தினம்
(iv) திரு. பெ. விஜயரத்தினம்
(v) ஜனாப் S. கமால்டீன்
(vi) பேராசிரியர் எஸ். சந்திரசேகரன்
(vii) திரு. க. நீலகண்டன்

(ix) அல்ஹாஜ் S. M. ஹனிபா
(x) செல்வி . M. சற்சொரூபவதிநாதன்

4. உப செயலாளர்

திரு. ஆ. இ. பாலஸ்ரீதரன்

5. பொருளாளர்

திரு. தி. கணேசராசா

6. உப பொருளாளர்

திரு. எஸ். பாலேஸ்வரன்

7. அங்கத்தவர்கள்

(i) திரு. க. குமரன்
(ii) திரு. க. அருணாசலம்
(iii) திரு. வீரபாண்டிய சர்மா
(iv) திரு. M. சடாட்சரன்
(v) திரு. M. தேவராசா
(vi) திரு. செ. மதுசூதனன்
(vii) கலாநிதி. ஆர். மகாலிங்கசிவம்
(viii) திரு. எஸ். ரி. கனகலிங்கம்
(ix) திரு. கே. ஞானகாந்தன்
(x) திரு. எஸ். துரைராசா
(xi) திரு. எஸ். பாஸ்கரர்
(xii) திரு. என். கனகரஞ்சிதம்
(xiii) திரு. ரி. இராசரத்தினம்
(xiv) திரு. சி. கந்தசாமி
(xv) ஜனாப். ஜின்னா ஷரிபுத்தீன்
(xvi) திரு. இரா. மயில்வாகனம்
(xvii) திரு. கே. துரைரத்தினம்
(xviii) செல்வி. க. ஸ்ரீகுமாரி
(xix) திரு. ஆ. கந்தசாமி
(xx) திரு. த. கோபாலகிருஷ்ணன்
(xxi) திரு. வீரசொக்கன்
(xxii) திரு. த. கனகரத்தினம்
(xxiii) திரு. அ. திருநாவுக்கரசு
(xxiv) திரு. எஸ். வரதராசபிள்ளை
(xxv) செல்வி. அ. அரியரட்ணம்



## இணைப்பு - 2

## இவ்வருடச் செயற்பாட்டுக் குழுக்கள்

1. **கல்விக்குழு**
திரு. ஆ. கந்தசாமி (செயலாளர்)
திரு . த. கனகரத்தினம்
திரு. எஸ். சரவணமுத்து
திரு. கு. சோமசுந்தரம்
புலவர். அ. திருநாவுக்கரசு
திரு. சி. கந்தசாமி

2. **இலக்கியக் குழு**
ஜனாப் ஜின்னா ஹரிபுத்தீன் (செயலாளர்)
செல்வி. சற்சொரூபவதி நாதன்
திரு க. குமரன்
திரு. T மதுசூதனன்
திரு. பெ. விஜயரட்ணம்
திரு. T. கோபாலகிருஷ்ணன்

3. **நூல்நிலையம்**
திரு. T. கோபாலகிருஷ்ணன் (செயலாளர்)
திரு. இரா. மயில்வாகனம்
திரு. எஸ். துரைராசா
திரு. க. அருணாசலம்
திரு. க. குமரன்
திரு. K. உதயகுமார்

4. **கட்டிடக் குழு**
திரு. J. திருச்சந்திரன் (செயலாளர்)
திரு. மா. தேவராஜர்
திரு. ஆ. இ. பாலஸ்ரீதரன்
திரு. எஸ். பாலேஸ்வரன்
திரு. தி. கணேசராஜா
திரு. ஆ. கந்தசாமி
திரு. எஸ். T. கனகலிங்கம்

5. **உறுப்புரிமை**
திரு. [illegible]. உதயகுமார்
திரு. S கந்தசாமி (செயலாளர்)
திரு. [illegible]. ஞானகாந்தன்
திரு. த. இராசரத்தினம்
திரு. ஆ. சடாட்சரன்

6. **யாப்புத் திருத்தல்**
திரு. [illegible]. நீலகண்டன் (செயலாளர்)
திரு. எஸ். சரவணமுத்து
Dr. R. மகாலிங்கசிவம்
திரு. ஜ. திருச்சந்திரன்
திரு. S. கந்தசாமி.

## 12.12.98 ல் இருந்து 5.11.99 வரை சேர்த்துக் கொள்ளப்பட்ட அங்கத்துவம் (இணைப்பு - 3)

**சாதாரணம்**

1. திரு. சரவணமுத்து சுப்பிரமணியம்
2. திரு. தாமோதரம்பிள்ளை சண்முகநாதர்
3. திரு. தணிகாசலம் ரவிந்திரன்
4. திரு. நடராசா சிதம்பரநாதர்
5. திரு. செல்லையா சொக்கலிங்கம்
6. திரு. க. சிவகாமி பாலகிருஷ்ணன்
7. திரு. தண்டாயுதபாணி சிவஞானரஞ்சன்
8. திரு. பரமலிங்கம் சண்முகராசா
9. திரு. காசிநாதன் குட்டித்தம்பி சண்முகராசா
10. திரு. உதுமாலெவ்வை அலியார்
11. திரு. சுப்பிரமணியம் கருணை ஆனந்தம்
12. திரு. ஆறுமுகம் நடராசா யோகநாதர்
13. திரு. கனகரத்தினம் விக்னராசா
14. திரு. அரியகுட்டி அரியரத்தினம்
15. திரு. நரசிங்கம் சிவன்
16. திரு. வேலுப்பிள்ளை அண்ணாமலை திருஞானசுந்தரம்
17. திரு. சுப்பன் கோபால் ஏழுமலை
18. திரு. கதிரவேலு கமலசேகரம்
19. திரு. மடுலகிரிய விஜயரட்ண
20. திரு. நவரத்தினம் அழகரசன்
21. திரு. A.S. தனபாலசிங்கம்
22. திரு. சிவலிங்கம் சரவணபவன்
23. திரு. வல்லிபுரம் இராமச்சந்திரன்
24. திரு. பொன்னையா சுந்தரமூர்த்தி
25. திரு. சொக்நாதன் நல்லையா
26. திரு. சின்னத்தம்பி பரமானந்தம்
27. திரு. சிவகடாட்சம்பிள்ளை சத்தியகுமாரன்
28. திரு. செல்லத்துரை மனோகரன்
29. திரு. குமாரசாமி நந்தகுமார்
30. திரு. சதாசிவம் முத்துக்குமாரசாமி
31. திரு. முருகேசம்பிள்ளை வேலாயுதபிள்ளை
32. திரு. துரைராசா சிற்சபேசன்
33. திரு. தம்பையா இராசேந்திரம்
34. திரு. சவரிமுத்து குணரத்தினம்
35. திருமதி. சிவகாம சௌந்தரி விஜயரத்தினம்
36. திருமதி. கமலாம்பிகை லோகிராசா



## ஆயுள் அங்கத்தவர்கள

1. திரு. மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்
2. திரு. முத்தையா கதிர்காமநாதன்
3. திரு. குமாரசிங்கம் பரமானந்தம்
4. திரு. சிவசுப்பிரமணியம் பத்மநாதன்
5. திரு. கந்தப்பு ஞானசேகரம்
6. திரு. சே. மஹம்மது யூசுப் கமால்டீன்
7. திரு. இராமுப்பிள்ளை பூபலசிங்கம் ஸ்ரீதர்சிங்

## இணைப்பு - 4

## 29.6.98 இருந்து 31.10.99 வரை தமிழ்ச்சங்க நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்தவர்களது பெயர் விபரங்கள்

| பெயர் | நூல்கள் தொகை |
|---|---|
| திரு. வை. கனகரத்தினம் | 02 |
| திருமதி. தங்கராணி நடராசா | 01 |
| திரு. த. சண்முகசுந்தரம் | 01 |
| திரு. பெ. விஜயரத்தினம் | 02 |
| ஸலாமிய ஆராச்சி நிறுவனம் | 05 |
| திரு. க. கணகசபாபதி | 10 |
| திரு. வே. பரமநாதபிள்ளை | 01 |
| திரு. செ. குணரத்தினம் | 07 |
| திரு. கோவிலூர் செல்வராஜன் | 02 |
| திரு. சுந்தரம் டிவகலாலா | 04 |
| திரு. K.K. உதயகுமார் | 18 |
| டாக்டர் N. பெஞ்சமின் | 38 |
| திரு. S. இரத்தினப்பிரகாஷ் | 21 |
| திரு. T. கனகரத்தினம் | 02 |
| திருமதி. சோமககாந்தன் | 16 |
| திரு. இ. சிவகுருநாதன் (தலைவர்) | 23 |
| செல்வி. சி. சிவலதா | 02 |
| செல்வி. த. ஜெயமாலா | 04 |
| திரு. சு. சதானந்தம் | 29 |
| திரு. க. கனகசபாபதி | 02 |
| திரு. S. நடராசா | 01 |
| திரு. P. கணநாதபிள்ளை | 21 |
| திருமதி. கலைவாணி இராமநான் | 10 |
| திரு. இரா. மயில்வாகனம் | 04 |
| திரு. ம. கங்காதரம் | 01 |
| திரு. கா. செ. நடராஜா | |
| திரு. தி. கணேசராஜா | 03 |
| திரு. ஆ. நடராசா | 01 |

| | |
|---|---|
| திரு. S.H. ஜமீல் | 03 |
| இராமகிருஷ்ண மிஷன் (கல்முனை) | 01 |
| திருமதி. ச. வேலாயுதம் | 08 |
| திரு. அ. சிவரத்தினம் | 01 |
| திரு. கா. வைத்தீஸ்வரன் | 02 |
| திரு. வ. இராசையா | 03 |
| செல்வ. ம. ஹம்சகௌரி | 02 |
| திரு. மடளுககிரியே விஜெரத்ன | 02 |
| திரு. D. சித்தார்தனன் | 01 |
| திரு. வை. செ. தேவராஜா | 02 |
| திரு. சி. அமிர்தலிங்கம் | 03 |
| திரு. சண்முகம் செட்டியார் | 02 |
| இந்துசமயக் கலாச்சார திணைக்களம் | 16 |
| பேராதனைப் பல்கலைக்கழகம் | 01 |
| செல்வி. சற்சொரூபவதிநாதன் | 01 |
| திரு. முகம்மது சமீம் | 08 |
| திரு. P.S. கிரிதரன் | 07 |
| திருமதி. விசுவாம்பா விசாலாட்சி | 01 |
| திரு. சொ. இராமேஸ்வரன் | 01 |
| திரு. S. எதிர்மனசிங்கம் | 02 |
| திரு. செ. வேலாயுதபிள்ளை | 01 |
| திருமதி. ராதமணி ஜீவரட்ணம் | 01 |
| செல்வி. ம. சுவர்ணமாலா | 03 |
| செல்வ. மு. டக்கியா திரு. க. சிவகுருநாதன் | 02 |
| திரு. N.D. பீரிஸ் | 02 |
| டாக்டர் வ. செ. குழந்தை | 01 |
| திரு. க. குமரன் | 83 |
| கொழும்பு வெள்ளவத்தை அரசினர் வித்தியாலயம் | 03 |
| செல்வி. பத்மாசனி ஆறுமுகம் | 05 |
| சைவப்புலவர் சு. செல்வத்துரை | 02 |
| திரு. V.S. துரைராஜா | 147 |
| திரு. த. கணேசன் | 01 |
| செல்வி A. சந்திரவதனி | 01 |
| செல்வி. R. உமா | 01 |
| திரு. சி. கணபதிப்பிள்ளை | 01 |
| செல்வி. V. விஜயலஷ்மி | 01 |
| திரு. மா. மாணிக்கம் | 01 |
| திரு. கா. வைத்தீஸ்வரன் | 01 |
| திரு. த. கணேசன் | 01 |
| திரு. நா. அழகரசன் | 04 |
| திரு. R. சிவகரநாதன் | 04 |
| செல்வி. R. உமா | 01 |
| திரு. சு. சதானந்தம் | 15 |
| திருமதி. S. சீவரத்தினம் | 17 |
| திரு. சி. கணபதிப்பிள்ளை | 01 |
| செல்வி. வி. விஜயலக்ஷிமி | 01 |



| | |
|---|---|
| திரு. மா. மாணிக்கம் | 01 |
| செல்வி. A. சந்திரவதனி | 01 |
| திரு. செ. குணரத்தினம் | 18 |
| செல்வி. சிவதர்ஷினி ஜெயபாலசிங்கம் | 54 |
| திரு. தி. கணேசராஜா | 02 |
| திரு. N. சின்னத்துரை | 60 |
| திரு. வே. அ. திருஞானசுந்தரம் | 253 |

## இணைப்பு - 5

## கொழும்புத் தமிழ்ச் சங்கம்
## கட்டிட நன்கொடை - 1998 / 1999

| | | ரூ. ச. |
|---|---|---|
| 23.7.98 | Dr. நாஜ் நாகேந்திரன் | 1,000,000.00 |
| 05.10.98 | S. பகிரதன் | 2,000.00 |
| 06.10.98 | ச. சிவசுப்பிரமணியம் | 10,000.00 |
| | K. கணேசலிங்கம் | 10,000.00 |
| 18.10.98 | Safety System | |
| | M.N. நடராசா | 20,000.00 |
| 23.10.98 | த. கனகரத்தினம் | 1,000.00 |
| 24.10.98 | A.M. சமீம் | 10,000.00 |
| 08.11.98 | அறங்காவலர் தி. செந்தில்வேல் | 25,000.00 |
| 28.11.98 | தெ. ஈஸ்வரன் | 10,000.00 |
| 13.07.99 | Dr. நாஜ் நாகேந்திரன் | 500,000.00 |
| 25.07.99 | | 500,000.00 |
| 20.12.98 | திரு. எஸ். கணபதிப்பபிள்ளை | 5,000.00 |
| 16.02.99 | பேராசிரியர் உவைஸ் | 10,000.00 |
| 29.10.99 | Dr. நாஜ் நாகேந்திரன் | 200,000.00 |

**ஏனையவை**

| | | |
|---|---|---|
| | **மஸ்கன் லிமிட்டெட்** | |
| | சீமெந்து | 200 பக்கற் |
| | சீமெந்து | 100 பக்கற் |
| | மின் வசிறி திரு. T. கமலேஸ்வரன | 11 மின்விசிறி |

**பண்டித மாநாடு**

| | | |
|---|---|---|
| 27.1.99 | சி. கணபதிப்பிள்ளை | 5,000.00 |
| 16.2.99 | S. நமசிவாயம் | 1,000.00 |
| | S. நடேஸ்வரன் | 100.00 |
| | S. சரவணமுத்து | 1,000.00 |
| | J. திருச்சந்திரன் | 2,000.00 |
| 16.02.99 | அ. திருநாவுக்கரசு | 3,000.00 |
| | எஸ். இலகுப்பிள்ளை | 1,500.00 |
| | க. துரைத்தினம் | 1,000.00 |
| | க. நீலகண்டன் | 4,000.00 |

| | | |
|---|---|---|
| | எஸ். துரைராசா | 1,000.00 |
| | வீரசொக்கன் | 150.00 |
| | ஆ. இ. பாலேஸ்வரன் | 250.00 |
| | S. பாலேஸ்வரன் | 150.00 |
| | ஏ.ஜே. ஷரிபுத்தின் | 500.00 |
| | எஸ். வரதராசப்பிள்ளை | 500.00 |
| | செல்வி. க. சிறீகுமாரி | 500.00 |
| | செல்வி. அ. அரியரட்ணம் | 500.00 |
| | K. ஞானகாந்தன் | 500.00 |

## சங்கத்திற்கு அன்பளிப்பு

| | | |
|---|---|---|
| 19.12.98 | இந்து கலாச்சார அமைச்சு | 10,000.00 |
| 05.06.99 | இந்து கலாச்சார அமைச்சு (2 குத்துவிளக்கு) | 10,000.00 |
| | ஸ்ரீபால செல்வ விநாயக ஆலய பிரதம குரு. பிரமஸ்ரீ பா. சண்முகரத்தினசர்மா குத்துவிளக்கு (4 அடி) (ஒன்று) | |

## சங்க நூலகத்திற்கு அன்பளிப்பு

| | | |
|---|---|---|
| 30.09.98 | செல்வி. அ. அரியரட்ணம் | 1,000.00 |
| | திரு. வ. இராசையா (மங்கையர் மலர் வருடச்சாந்தா) | 480.00 |

ஃஃஃ



# கொழும்புத் தமிழ்ச் சங்கம் சபை வரைவுள்ளது

## 31.12.1998 இல் உள்ளபடியான ஐந்தொகை

| நிலையான சொத்து | குறிப்பு | 31.12.98 ரூ. சதம் | 31.12.97 ரூபா. |
|---|---|---|---|
| கட்புலனாகும் சொத்துக்கள் | 7 | 3,563,349,71 | 3,676,140 |
| முதலீடுகள் நிரந்தர வைப்புக்களில் | 8 | 569,217.88 | 506,121 |
| | | 4,132,567.59 | 4,182,261 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 9 | 1,236,767.25 | 277,446 |
| கழி நடைமுறைப் பொறுப்புக்கள் | 10 | 48,173.46 | 372,599 |
| தேறிய நடைமுறைச் சொத்து | - | 1,188,593.79 | (95,153) |
| தேறிய சொத்து | - | 5,321,161.38 | 4,087,108 |
| நிதியிடல் | 11 | 3,753,608,60 | 3,723,756 |
| திரண்ட நிதி | 12 | 1,204,201.00 | - |
| பரிசல் நிதி | 13 | 172,704.28 | 172,704 |
| அச்சகநிதி | 14 | 170,647.50 | 170,648 |
| ஞாபகார்த்த நிதி | 15 | 20,000.00 | 20,000 |
| | | 5,321,161.38 | 4,087,108 |

சரியானதென உறுதிப்படுத்தப்பட்டது

ஒப்பம்

| இ.சிவகுருநாதன் | தி. கணேசராசா | சோ. தேவராஜா |
|---|---|---|
| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |

மேற்காட்டிய 1998 டிசெம்பர் 31ம் திகதியல் ஐந்தொகைக் கணக்கு சரியானதெனவும், இதனோடு இணைந்துள்ள 1998 டிசெம்பர் 31 இல் முடிவுள்ள ஆண்டு வரவு செலவுக்கணக்குகள் கொடுத்த பேரேடு, காசேடு, தகவல்கள் ஆகியவற்றின்படி தயாரிக்கப் பெற்றன எனவும் உறுதிப் படுத்துகின்றேன்.

ஜீ. இராசதுரை அன்கோ
பட்டயக்கணக்காளர்

கொழும்பு
25, ஒக்டோபர். 1997.

## 31.12.98 ல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானச் செலவுக் கணக்கு

| | குறிப்பு | 31.12.98 | 31.12.97 |
|---|---|---|---|
| **அங்கத்துவச் சந்தா** | | (ரூபா.) | (ரூபா). |
| ஆயுள் உறுப்பினர் | | 18,000.00 | 8000 |
| சாதாரண உறுப்பினர் | | 7,850.00 | 6,350 |
| நன்கொடை | 16 | 749,483.73 | 919,079 |
| நிலையான வைப்பு வட்டி | 17 | 97,165.19 | 68.595 |
| சில்லறை வருமானம் | 18 | 7.422.25 | 11.329 |
| | | 879.921.17 | 1,013.353 |
| **கழி செலவுகள்** | | | |
| நிலையநிர்வாகச் செலவு | 19 | 836,262.40 | 647,638 |
| நிதியும் ஏனைய செலவுகளும் | 20 | 5,908.41 | 6,492 |
| | | 842,170.81 | 654,130 |
| வரிக்கு முன் செலவிலும் கூடிய வருமானம் | | 37,750.36 | 359,223 |
| கழி : வரி | | இல்லை | இல்லை |
| வரிக்குப் பின் செலவிலும் கூடிய வருமானம் | | 37,750,36 | 359,223 |
| கூட்டுக. மேலதிகசாதாரண விடையம் | | - | - |
| செலவிலும் கூடிய வருமானம் | | 37,750.36 | 359,223 |

## 31.12.1998 முடிவடைந்த கணக்குகளின் குறிப்புக்கள்

| 09. நடைமுறைச் சொத்து | குறிப்பு | 31.12.98 | 13.12.97 |
|---|---|---|---|
| | | (ரூபா) | (ரூபா) |
| மீள் விற்பனைக்குரிய புத்தகங்கள் இருப்பு | | 177,094.00 | 184,679 |
| கடன்படுநர் | | 2,900.00 | 2,900 |
| திரு. P. பரமநாதரிடம் இருந்து வருமதி | | 6,990.00 | 6,990 |
| மின்சாரவைப்பு மீளப் பெறவேண்டியது | | 190.00 | 190 |
| 9 ஏ வருமான வரி | | 25,973.00 | 31,102 |
| திரு. T. உதயகுமாரிடம் இருந்து கிடைக்க வேண்டியது | | | 14,409 |



| | | |
|---|---|---|
| புத்தகங்கள் பதிப்புக்கான முற்பணம் | 15,000.00 | 5,000 |
| போட்டோ கொப்பி சேவை வருமதி | - | 496.00 |
| சேமிப்பு வங்கியில் (சேமிப்பு) 09B | 981,749.20 | - |
| வங்கியில் கையிருப்பு 09C | 26,870.77 | 17,680 |
| தொங்கல் க/கு | - | 14,000 |
| | 1,236,767.25 | 277,446 |

**10.நடைமுறைப் பொறுப்புக்கள்**

| | | |
|---|---|---|
| நூலக வைப்பு | 800.00 | 800 |
| கடன் கொடுக்குநர் (செலவுக்கு)10A | 45,099.46 | 82,788 |
| புதிய கட்டிடத்திற்கு | | 215,029 |
| கொடுக்குமதி மாற்றப்படாத | | 2,274 |
| காசோலை பற்றுக்கணக்கு இல | 2,274.00 | |
| ஹாற்றன் நஷினல் வங்கி மே.ப (காசோலை இல. 194304016) | - | 71,708 |
| | 48,173.46 | 372,599 |

**11.திரண்ட நிதி**

| | | |
|---|---|---|
| கடந்த ஐந்தொகையின்படி | 3,723,755.89 | 3,522,204 |
| கூட்டு செலவிலும் கூடிய வருமானம் | 37,750.36 | 359,223 |
| | 3,761,506.25 | 3,881,427 |
| கழி கடந்த வருடச் சீராக்கம் | 7,897,65 | 157,671 |
| | 3,753,608.60 | 3,723,756 |

**12. கட்டிட நிதி**

**(31.12.1998 வரையிலான கணக்கு)**

| | |
|---|---|
| திரு. GG. பொன்னம்பலம் (Jr) | 10,000.00 |
| செல்வி வி. விஜயலக்குமி | 200.00 |
| திரு. ஜெ. திருச்சந்திரன் | 2,500.00 |
| மாணிக்கம் சகோதரர்கள் | 50,000.00 |
| திரு. இ. சிவகுருநாதன் | 5,000.00 |
| திரு. P. பாலசுந்தரம் | 25,000.00 |
| திரு. R. P. சிறிதர் சிங் | 5,000.00 |
| திரு. M. தேவராஜா | 1,000.00 |
| திரு. T. கோபாலக்கிருஷ்ணன் | 1,000.00 |
| திரு. S. கந்தசாமி | 2,000.00 |
| திருமதி. சந்தனா நல்லலிங்கம் | 1,000.00 |

| | | |
|---|---|---|
| திரு. P. பாலசுந்தரம் | 10,000.00 | |
| திருமதி. சாந்தி சச்சிதானந்தம் | 1,000.00 | |
| கலாநிதி R. மகாலிங்கசிவம் | 1,000.00 | |
| பிரவுன்சன் தொழிலகம் | 10,000.00 | |
| திரு. S. துரைராசா | 1,500.00 | |
| கலாநிதி S. நாஜ் நாகேந்திரன் | 1,000,000.00 | |
| திரு. எஸ். பகீரதன் | 2,000.00 | |
| திரு. எஸ் சிவசுப்பிரமணியம் | 10,000.00 | |
| திரு. K. கணேசலிங்கம் | 10,000.00 | |
| திரு. K. கனகரத்தினம் | 1,000.00 | |
| திரு. T. செந்தில்வேல் | 25,000.00 | |
| திரு. A. M. சமீம் | 10.000.00 | |
| திரு. T. ஈஸ்வரன் | 10.000.00 | |
| திரு. P. விஜயரத்தினம் | 1,000.00 | |
| திரு. K. துரைரத்தினம் | 1,001.00 | |
| திரு. T. சண்முகநாதன் | 1,000.00 | |
| திரு. T. இராசநாயகம் | 1,000.00 | |
| திருமதி. இராணி இராஜயோகம் | 1,000.00 | |
| திரு. K. கணபதிப்பிள்ளை | 5,000.00 | |
| | 1,204,201.00 | |

| | | |
|---|---|---|
| **13. பரிசில் நிதி** | 31.12.1998 | 31.12.97 |
| கடந்த ஐந்தொகைப்படி | 172,704.28 | 172,704 |
| **14. அச்சக நிலை** | | |
| கடந்த ஐந்தொகைப்படி | 170,647.50 | 170,648 |
| **15. ஞாபகார்த்த நிதி** | | |
| பேராசிரியர் வித்தியானந்தன் | 20,000.00 | 20,000 |
| **16. கொடைகள்** | 31.12.1998 | 31.12.97 |
| கட்டிட நிதி | - | 15,130 |
| கல்வி நிதி | 636,000.00 | 716,699 |
| நூலக அங்கத்துவக் கட்டணம் | 41,535.00 | 32,250 |
| பாலபண்டித வகுப்பு - பதிவுக் கட்டணம் | 3,900.00 | - |
| நூலக நிதி | - | 2,000 |
| மண்டப நன்கொடை 16A | 29,935.00 | |
| கனெடிய உயர்ஸ்தானிய காரியாலயம் நன்கொடை | | 133,000 |



| | | |
|---|---|---|
| நாவற்குழியூர் நடராசன் ஞாபகார்த்த நிதி | 20,000.00 | 20,000 |
| நன்கொடை - திருமதி - உதயகுமார் | 3,538.73 | |
| ஏனையவை | 14,575.00 | |
| | 749,483.73 | 919,074 |

| | | |
|---|---|---|
| **17. வட்டி வருமானம்** | | |
| சேமிப்புக் கணக்குவட்டி - இந்தியன் வங்கி | 94.02 | 110 |
| நிலையான வைப்பு வட்டி | 67,498.17 | 68,484 |
| ஹற்றன் தேசிய வங்கி-சேமிப்புக்கணக்கு வங்கி | 29,573.00 | - |
| | 97,165.19 | 68,594 |

| | | |
|---|---|---|
| **18. வேறு வருமானம்** | | |
| நூல் விற்பனை வருமானம் 18 A | 1,576.00 | இல்லை |
| போட்டோப்பிரதி சேவை வரவு (இழப்பு)18B | 526.75 | 5120 |
| பழைய பத்திரிகை விற்பனை | 640.00 | - |
| சுகாதாரக் கருத்தரங்கு வருவாய் | 2,800.00 | - |
| நூலகத் தெண்டம் | 2,359.00 | 2175 |
| ஏனையவை வருவாய் | 574.00 | 4034 |
| | 7,422.25 | 11,329 |

| | | |
|---|---|---|
| **19. நிலைய நிர்வாகச் செலவுகள்** | | |
| ஊழியர் அலவன்ஸ் | 162,937.70 | 161,917.00 |
| ஊழியர் சேமலாபநிதி | 9,218.80 | - |
| ஊழியர் நம்பிக்கை நிதி | 2,304.70 | - |
| ஊழியர் சேமலாபநிதி | 21,031.60 | - |
| ஊழியர் நஸ்டஈடு | 20,000.60 | - |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 16,758.44 | - |
| தொலைபேசிக் செலவினம் | 11,745,51 | 4,725.00 |
| | 243,996.75 | 166,642.00 |

| | | |
|---|---|---|
| நிலைய நிர்வாகச் செலவு (தொடர்) | 243,996.75 | 166,642 |
| நீர் வரி | 29,812.50 | 26,395 |
| காப்புறுதி | 18,603.00 | 18,603 |
| இறைகளும் வரியும் | 5,905.20 | 4,272 |
| மின்சாரம் | 21,000.00 | 22,514 |
| அலுவலகச் செலவு | 2,840.50 | 22,721 |

| | | |
|---|---|---|
| கூட்டச் செலவினங்கள் | 13,176.00 | 1,132 |
| அச்சிடல் காகிதாதிகள் | 5,338.50 | 2400 |
| காவலர் சேவை | 90,340.00 | 77,773 |
| புலமைப்பரிசில் செலவு | 2,250.00 | 1,000 |
| தபாற் செலவு | 5,028,50 | 5263 |
| பத்திரிகை, சஞ்சிகைகள் | 17,461.00 | 12569 |
| கணக்காய்வுக் கட்டணம் | 12,000.00 | 10,000 |
| தளபாடம் திருத்துதல் | 8,121.00 | 2000 |
| அச்சுக்கூடச் செலவு | 14,382.50 | 7,796 |
| கட்டிடத் திருத்த வேலை | - | 11560 |
| புத்தக வெளியீட்டுச் செலவினம் | - | 8485 |
| வளக்கச் செலவினம் | - | 25,880 |
| நாவற்குழியூர் நடராசன் நினைவு நாள் விழாச் செலவு | | 20,000 |
| புத்தகம் கட்டும் செலவினம் | 1,825.00 | 7,330 |
| விளம்பரச் செலவு | 7,144.00 | 7,596 |
| மின் உபகரணச் செலவினம் | 7,430,00 | - |
| போக்குவரத்துச் செலவு | 13,100.00 | 727 |
| செயலகர் செலவு | 3,712.00 | 3,500 |
| பொதுச் செலவினம் | 7,544.00 | - |
| விழா கருத்தரங்குகள் செலவினம் 19A | 81,510.00 | - |
| நானவிதச் செலவு | 22,245.25 | 23,620 |
| பெறுமானத் தேய்வு - நிலையான சொத்து | 201,496,70 | 157,860 |
| | 836,262.40 | 647,638 |

| **நிதிச் செலவும் ஏனைய செலவும்** | 31.12.98 | 31.12.97 |
|---|---|---|
| வங்கிக் கட்டணம் | 1,161.50 | 1,226 |
| மேலதிகப் பற்று வட்டி | 4,746.91 | 5,266 |
| | 5,908.41 | 6,492 |

31.12.98 ல் முடிவடைந்த கணக்கின் உபகுறிப்பு

**9A. செல்மதி மீளப்பெறக்கூடிய வருமானவரி**

| | |
|---|---|
| இறுதி ஐந்தொகைப்படி | 31,101.89 |
| கழி வருடத்திற்கானவரி | 9,530.00 |
| | 21,571.89 |



கூட்டுக : வட்டியில் இருந்து கழிக்கப்பட்ட

| | |
|---|---|
| 9A (1) W.H.T | 4,401.39 |
| | 25,973.28 |

**9A (1) W.H.T இருந்து கழிக்கப்பட்ட வட்டிவருமானம்**

| | |
|---|---|
| நிலையான வைப்பு | 4,401,39 |

**9B சேமிப்புக் கணக்கு**

| | |
|---|---|
| (1) ஹற்றன் தேசிய வங்கி வெள்ளவத்தை A/C No. 0263571013 | 980,359,37 |
| (2) இந்தியன் வங்கி இல. 10900136 | 1,389.83 |
| | 981,749.20 |

**9C வங்கியில் காசு**

| | |
|---|---|
| (1) இலங்கை வங்கி - வெள்ளவத்தை 0230102406 | 8,741.06 |
| (2) ஹற்றன் தேசிய வங்கி 0104384016 | 6,102.35 |
| (3) கொமேஷியல் வங்கி, வெள்ளவத்தை 6015662 | 12,027.36 |
| | 26,870.77 |

**10A செல்மதிச் செலவினங்கள்**

| | |
|---|---|
| கணக்காய்வுக் கட்டணம் | 550.00 |
| கணக்காய்வுக் கட்டணம் (1997/98) | 8,500.00 |
| கணக்காய்வுக் கட்டணம் (1998/99) | 12,000.00 |
| நுண்ணாய்வுக் கொடுக்குமதி | 20,000.00 |
| தொலைபேசிச் செலவினம் | 1,498.96 |
| நீர் வரி | 2,550.50 |
| | 45,099.46 |

**31.12.98 ல் முடிவடைந்த கணக்ககின் உப குறிப்பு (தொடர்)**

16A மண்டப வாடகை

| | |
|---|---|
| திரு. M.M.M. நூர்தக்கு | 1,000.00 |
| திரு. கோவிலூர் செல்வராஜன் | 1,200.00 |
| இந்து கலாச்சார அமைச்சு | 1,200.00 |
| S.P. சாமி அன்கோ | 1,150.00 |
| இந்து கலாச்சார அமைச்சு | 300.00 |
| திரு. M.A. அலியார் | 1,000.00 |
| கௌரவ செயலாளர் கல்வி அமைச்சு (வ.கி) | 1,885.00 |
| திரு. ஆ. பேரம்பலம்- ஆ. தளையசிங்கம் | 2,000.00 |
| தேசியக் கல்வி நிறுவனம் | 13,950.00 |
| மகாஜனாக்கல்லூரி பழைய மாணவர் | |

| | |
|---|---|
| சங்கம் (கொ.கி) | 1,250.00 |
| கலாசாரச் சங்கம் | 1,000.00 |
| வி.பதி | 1,000.00 |
| திரு. R. பாலசுப்பிரமணியம் | 1,000.00 |
| திருமதி. J. வினோதன் | 1,000.00 |
| திரு. அருணா செல்லத்துரை | 1,000.00 |
| | **29,935.00** |

**18A நூல் விற்பனை வருமானம்**

| | |
|---|---|
| மொத்த வருமானம் | 9,161.00 |
| கழிக்கவும் நூல் கொள்விலை | 7,585.00 |
| | **1,576.00** |

**19A விழாக்கள் கருத்தரங்குச் செலவுகள்**

| | |
|---|---|
| கலாச்சார நிகழ்வுகள் | 26,436.50 |
| சுகாதார நிகழ்வுகள் | 4,249.00 |
| பொருட்காட்சி (புத்தகம்) | 12,308.00 |
| இசை நடன நிகழ்ச்சிகள் | 35,509.50 |
| அத்திவாரக்கல் நாட்டுதல் - திறப்பு நிகழ்ச்சி | 3,007.00 |
| | **81,510.00** |


**18B ஆதயம் நஸ்டம் பொட்டோக் கொப்பி சேவை**

| | |
|---|---|
| மொத்த வருவாய் | 10,992.00 |
| கழி செலவு | 11,518.75 |
| | **(526.75)** |

# கொழும்புத் தமிழச் சங்கம் 1998.12.31 ல் முடிவடைந்த ஆண்டின் கணக்குகளின் குறிப்பு

| 07. சொத்துக்கள் பொறியும் உபகரணங்களும் | 1.1.1998 கொள்விலை | மேலதிக தொகை | 31.12.98இல் கொள்விலை | திரண்ட பெறுமானத் தேய்வு | பெறுமானத் தேய்வு வீதம் | பெறுமானத் தேய்வு | 31.12.98ல் திரண்டபெறு மானத் தேய்வு | 31.12.98 இல் பெறுமானம் | 1.1.1999ல் பெறுமானம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிலம் | 19,625.00 | - | 19,625.00 | - | | | - | 19,625.00 | 19,625 |
| கட்டிடம் | 3,727,091.13 | 44,101.00 | 3,771,192.13 | 443,995.18 | 5% | 164,154.80 | 608,149.98 | 3,163,042.15 | 3,283,096 |
| மின் உபகரணம் | 24,322.35 | - | 24,322.35 | 19,234.60 | 10% | 508.77 | 19,743.37 | 4,578.98 | 5,008 |
| மின் விசிறிகள் | 43,830.81 | - | 43,830.81 | 33,958.11 | 10% | 987.27 | 34,945.38 | 8,885.43 | 9,873 |
| அலுவலக உபகரணங்கள் | 29,379.63 | - | 29,379.63 | 21,282.13 | 10% | 809.75 | 22,091.88 | 7,287.75 | 8,097 |
| விலையிடும் இயந்திரம் | 1,400.00 | - | 1,400.00 | 481.46 | 10% | 91.85 | 573.31 | 826.69 | 918 |
| கணிப்பான் | 1,200.00 | - | 1,200.00 | 228.00 | 10% | 97.20 | 325.20 | 874.80 | 972 |
| தளபாடங்கள் பொருத்துக்கள் | 351,348.18 | - | 351,348.18 | 165,136.11 | 10% | 18,621.20 | 183,757.31 | 167,590.87 | 186,212 |
| நூலக புத்தகம் | 43,172.93 | 22,864.25 | 66,037.18 | 13,914.28 | 10% | 2,925.86 | 16,840.14 | 49,197.04 | 29,259 |
| போட்டோப் பிரதி யந்திரம் | 133,000,00 | | 133,000.00 | - | - | 13,300.00 | 13,300.00 | 119,700.00 | 133,000 |
| குழாய்க்கிணறு | - | 6,250.00 | 6,250.00 | - | - | - | - | 6,250.00 | - |
| தொலைபேசி | - | 15,491.00 | 15,491.00 | - | - | - | - | 15,491.00 | - |
| | 4,374,370.03 | 88,706.25 | 4,463,076.28 | 698,229.87 | | 201,496.70 | 899,726.57 | 3,563,349.71 | 3,676,140 |

| 08.நிலையான வைப்பில் முதலீடு | நிலையான வைப்புச் சான்றிதழ் இலக்கம் | மீதி 1.1.1998 | மொத்த வட்டி | வரி | தேறிய வட்டி | மீதி 31.12.1997 |
|---|---|---|---|---|---|---|
| ஹற்றன் நாஷனல் வங்கி | 04-80059-01 | 94,134.50 | 11,766.81 | 588.32 | 11,178.49 | 105,312.99 |
| வர்த்தக வங்கி | 6380034 | 25,977.86 | 2,841.76 | - | 2841.76 | 28,819.62 |
| வர்த்தக வங்கி | 6380026 | 12,988,94 | 1,498.35 | - | 1,498.35 | 14.487.29 |
| இந்தியன் வங்கி | 415873 | 30,941.40 | 2,784.73 | 278.47 | 2,506.26 | 33.447.66 |
| இந்தியன் வங்கி | 415878 | 16,842.67 | 1,937.87 | 155.07 | 1782.80 | 18.625.47 |
| இந்தியன் ஓவசீஸ் வங்கி | 824/45 | 141,713.04 | 17,714.02 | 1,771.41 | 15,942.61 | 157,655.65 |
| இந்தியன் ஓவசீஸ் வங்கி | 823/49 | 51,740.86 | 6,467.61 | 646.76 | 5,820.85 | 57,561.71 |
| இந்தியன் ஓவசீஸ் வங்கி | 1148/45 | 27,467.83 | 6,243.39 | 374.57 | 5,868.82 | 33,336.65 |
| ஹற்றன் தேசிய வங்கி | 16628/04-80059-2 | 45,143.06 | 9,628.62 | - | 9,628.62 | 54,771.68 |
| இந்தியன் ஓவசீஸ் வங்கி | 138/45 | 59,170.94 | 6,615.01 | 586.79 | 6028.22 | 65,199.16 |
| | | 506,121.10 | 67,498.17 | 4,401.39 | 63,096.78 | 569,217.88 |



நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டிடத் தொகுதி

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

தலைமைச் செயலகம்
இல. 7, 57ம் ஒழுங்கை,
(உருத்திரா மாவத்தை வழி)
கொழும்பு - 06.

GNANAMS ARTS & A.D.S TEL - 555935